# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.103/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜனனி | Husband's Name | : | கார்த்திக் |
| Village | : | நல்லடை | Taluk | : | தரங்கம்பாடி |
| Calling | : | | Age | : | 20 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 08th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது தரங்கம்பாடி தாலுகா, நல்லடையில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். என் கணவர் கார் டிரைவராக உள்ளார். என் தகப்பனார் ராமமூர்த்தி 5 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார். என் தாயார் பெயர் தேவி. என் அக்கா சுபஸ்ரீயை அனந்தமங்கலத்தில் சதீஷ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். ஆஜர் எதிரியை தெரியும். எதிரி என் வீட்டிற்கு எதிரே 3 வது வீட்டில் வசிக்கிறார். என் அப்பா ராமமூர்த்தியின் மருத்துவ செலவிற்காக எதிரியிடம் என் தாயார்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:14 +0530

தேவி ரூ.1,00,000/- கடனாக வாங்கியிருந்தார். மறுபடியும் என் தாயார் எதிரியிடம் ரூ.1,50,000/- வாங்கியுள்ளார். மொத்த பணத்தையும் எதிரி என் அம்மாவிடம் கேட்டபோது 5 Star Finance ல் உள்ள பத்திரத்தை மீட்டு பணத்தை கொடுப்பதாக என் அம்மா சொன்னார். பணத்தை திரும்ப கொடுக்க முடியாததால் என்னை திருமணம் செய்து கொடுக்குமாறு என் அம்மாவிடம் எதிரி அடிக்கடி பிரச்சனை செய்து வந்தார். நான் எதிரியை பிடிக்கவில்லை என திருமணம் செய்துகொள்ள ஒப்புக்கொள்ளவில்லை. எதிரி அடிக்கடி திருமணம் செய்துகொள்ளுமாறு தொந்தரவு செய்து வந்தார். நான் என் அக்கா சுபஸ்ரீ வீட்டிற்கு சென்றுவிட்டேன். அங்கிருந்து கார்த்திக் என்பவருக்கு என்னை திருமணம் செய்து வைத்தார்கள். எதிரி பணத்தையும் திரும்ப கொடுக்வில்லை, பெண்ணையும் கொடுக்கவில்லை நீ சொல்வதுபோல் நடக்கவில்லை உன்னை கொலை செய்துவிடுவேன் என அடிக்கடி என் அம்மாவை மிரட்டி வந்தார். அதன்பின் புல எண் 93/7 என் தாத்தா தெட்சிணாமூர்த்தி பெயரில் உள்ள இடத்தையும் சர்வே எண் 93/A-8 ல் உள்ள இடத்தையும் சேர்த்து பேரளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ரிஜிஸ்டர் செய்து கொண்டார். மேற்படி இடத்தில் உள்ள வீட்டில் என் அம்மாவையும் தாத்தாவையும் வீட்டை விட்டு வெளியோ போகாவிட்டால் அடித்து கொலை செய்துவிடுவேன் என்று

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:20 +0530

மிரட்டி வந்தார். கடந்த 22.09.2024 ம் தேதி இரவு 10.00 மணிக்கு என் அம்மா வீட்டிலிருந்தபோது என் அம்மாவை பிடித்து இழுத்து உடலில் கடித்து மிரட்டியுள்ளார். இது சம்மந்தமாக என் தாயார் பேரளம் போலீசில் எதிரி மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த விபரத்தை என் தாயார் என்னிடமும் என் அக்கா சுபஸ்ரீயிடமும் கூறினார். 10.11.2024 ம் தேதி இரவு 9.00 மணியளவில் என் அத்தை வசந்தி எனக்கு போன் செய்து பக்கிரிராஜா என் அம்மாவை உளியால் குத்தி கொலை செய்துவிட்டதாக சொன்னார். மறுநாள் விடியற்காலை 3.00 மணிக்கு வந்து பார்த்தபோது என் அம்மாவின் தொண்டை, மார்பு, கை ஆகிய இடங்களில் உளியால் குத்தப்பட்டு என் அம்மா இறந்து போயிருந்தார். அப்போது வீட்டில் என் தாத்தா தெட்சிணாமூர்த்தி இருந்துள்ளார். என் தாத்தாவை கேட்டபோது எதிரி எங்கள் வீட்டு மாட்டை ஓட்டிபோய் மேய்த்துவிட்டு திரும்பி இரவு 7.00 மணிக்கு எதிரி மாட்டை வீட்டிற்கு கொண்டுவந்த போது என் அம்மா ஏன் மாட்டை ஓட்டினே என கேட்டதற்கு தகராறு ஏற்பட்டு வீட்டிற்குள் நுழைந்து வீட்டின் பின்பக்க கதவருகே என் அம்மாவை நிற்க வைத்து கையில் வைத்திருந்த உளியால் கழுத்தின் நடுப்பகுதி, மார்பு ஆகிய இடங்களில் குத்தியும் தடுத்த என் அம்மாவின் இடது கை முட்டி, மார்பு, வலது பக்க தாடை, வயிறு ஆகிய இடங்களில் எதிரி

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:26 +0530

குத்தி என் அம்மாவை கொலை செய்ததாக வீட்டிலிருந்த என் தாத்தா தெட்சிணாமூர்த்தி சொன்னார். இது சம்மந்தமாக நான் பேரளம் காவல் நிலையத்தில் எழுத்து பூர்வமான புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகார் **அ.சா.ஆ.1**. ஏற்கனவே என் அம்மா கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்கும் என் தாத்தாவை அடித்துவிட்டு என் அம்மாவை கொலை செய்துவிட்டு வீட்டை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் என் அம்மாவை உளியால் குத்தி இரத்தக் காயம் ஏற்படுத்தி கொலை செய்துள்ளார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:32 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.103/2025

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தெட்சிணாமூர்த்தி | Father's Name | : | ராமையன் |
| Village | : | கீரனூர் | Taluk | : | நன்னிலம் |
| Calling | : | | Age | : | 80 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 08th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீரனூரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என் மருமகள் பெயர் தேவி. என் மகன் ராமமூர்த்தி வியாதி இருந்தபடியால் அதற்கு சிகிச்சையளிக்க தேவி எதிரியிடம் கடன் வாங்கியிருந்தார். என் பேத்தி ஜனனியை தனக்கு திருமணம் செய்து கொடுக்குமாறு எதிரி கேட்டார். எதிரி எங்களை கட்டாயப்படுத்தினார். ஜனனி ஒத்துக்கொள்ள மாட்டேன் என கூறிவிட்டு தன் அக்கா சுபஸ்ரீ வீட்டிற்கு சென்று விட்டது. தேவி பெயரிலிருந்த 10 குழி மனை, என் பெயரிலிருந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:39 +0530

மனை மற்றும் வீட்டையும் எழுதி தன் பெயரில் லோன் வாங்கி தருவதாக கூறி எதிரி தன் பெயரில் பத்திரப் பதிவு செய்து கொண்டார். பத்திரப் பதிவு முடிந்தவுடன் எங்களை காலி செய்ய சொல்லி எதிரி தொந்தரவு செய்தார். EB ஸ்விட்சை ஆப் செய்து விட்டார். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு 7.00 மணியளவில் தேவியும் நானும் வீட்டிலிருந்தோம். அப்போது எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து எங்கள் மாட்டை ஓட்டிக்கொண்டு வயலுக்கு சென்றுவிட்டு பிறகு எங்கள் வீட்டிற்கு வந்தபோது தேவி ஏன் என கேட்டதால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டு எதிரி தன் கையில் வைத்திருந்த உளியால் கதவு அருகே தேவி நின்று கொண்டிருந்தபோது முதற்குத்து தேவியின் கழுத்தில் நடுப் பகுதியில் பட்டது. எங்கள் வீட்டில் உள்ள விளக்கு வெளிச்சத்தில் நான் பார்த்தேன். வயிறு, மார்பு, கை, கால் ஆகிய இடங்களில் எதிரி குத்தியதில் காயம் ஏற்பட்டு தேவி சரிந்து விழுந்தார். ஊரில் உள்ளவர்கள் ஜனனிக்கு தகவல் கொடுத்தார்கள். ஜனனி வந்து கேட்டபோது சம்பவம் குறித்து நான் சொன்னேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் உளியைதான் சம்பத்தில் எதிரி பயன்படுத்தியது. அது **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் விசாரித்தார்கள்.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:45 +0530

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:50 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.103/2025

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | உமா | Husband's Name | : | வாசு |
| Village | : | கீரனூர் | Taluk | : | நன்னிலம் |
| Calling | : | | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 08th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீரனூரில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருக்கிறேன். அ.சா.1, அ.சா.2 மற்றும் எதிரி ஆகியோர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். எதிரியை எனக்கு தெரியும். தெட்சிணாமூர்த்தி மருமகள் பெயர் தேவி. தேவி இறந்து விட்டார். எதிரிக்கும் தேவிக்கும் அடிக்கடி சண்டை நடந்து கொண்டிருக்கும். போன வருடம் 9ம் மாதம் கூட தேவியை எதிரி கண்ணத்தில் கடித்து அது சம்மந்தமாக தேவி போலீசில் புகார் கொடுத்து அது சம்மந்தமாக விசாரணை நடந்தது. 10.11.2024 ம் தேதி இரவு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:26:56 +0530

7.00 மணிக்கு நானும் என் மகன் விஷ்வாவும் எங்கள் வீட்டு வாசலில் நின்றிருந்தோம். அப்போது எதிரி பக்கிரிராஜா தேவி வீட்டு மாட்டை வீட்டு வாசலில் கொண்டுவந்து கட்டினார். அப்போது தேவிக்கும் பக்கிரிராஜாவிற்கும் சண்டை ஏற்பட்டது. இதுபோல் தேவிக்கும் எதிரிக்கும் அடிக்கடி சண்டை நடப்பதால் அது வழக்கம் போல் நடக்கும் சண்டை என நினைத்துக் கொண்டோம். அப்போது தெட்சிணாமூர்த்தி வீட்டிலிருந்து சத்தம் போடவே நாங்கள் ஓடி சென்று பார்க்கும்போது தேவி கொல்லைபுற பின் வாசல் கதவருகே இரத்த வெள்ளத்தில் கிடந்தார். தேவியின் கழுத்து, மார்பு, வயிறு, இடது கை முட்டி, தொடை ஆகிய இடங்களில் குத்துபட்டு கிடந்தார். நாங்கள் தேவி வீட்டிற்கு போகும்போது எதிரி பக்கிரிராஜா உளியுடன் வெளியே வந்தார். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் உளிதான் எதிரி பக்கிரிராஜா கையில் வைத்திருந்த உளி. நாங்கள் தெட்சிணாமூர்த்தியை கேட்டபோது தேவியை எதிரி உளியால் குத்தியதாக சொன்னார். நாங்கள் உடனே தேவியின் மகள் ஜனனிக்கு தகவல் கொடுத்தோம். போலீசார் விசாரித்தார்கள்.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:01 +0530

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:07 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.103/2025

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அனிதா | Husband's Name | : | ரமேஷ் |
| Village | : | கீரனூர் | Taluk | : | நன்னிலம் |
| Calling | : | | Age | : | 34 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 08th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீரனூரில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியா இருக்கிறேன். என் கணவர் வெளிநாட்டில் இருக்கிறார். நான் என் மாமனார் சுந்தரேசனுடன் வசித்து வருகிறேன். என் மாமனார் நோய்வாய்பட்டு படுத்த படுக்கையாக இருக்கிறார். அவரால் நடமாட முடியாது. ஆஜர் எதிரியை தெரியும். எதிரிக்கும் தேவிக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்தது. அவர்களுக்குள் என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. கொடுக்கல்-வாங்கல் பற்றி எனக்கு தெரியாது. 10.11.2024 ம் தேதி இரவு 9.00

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:13 +0530

மணியளவில் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தபோது தேவி இறந்து கிடப்பதாக சொன்னார்கள். தேவி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் எதிரியிடம் இறந்துபோன தேவி ரூ.1,00,000/- கடனாக வாங்கியிருந்தார் எனவும் மேலும் அவரது கணவரின் மருத்துவ செலவிற்காக ரூ.1,50,000/- கடன் பெற்றிருந்தார் எனவும் அவரது கஷ்டத்தை பயன்படுத்திக் கொண்டு தேவியின் மகள் ஜனனியை எதிரி திருமணம் செய்து கொடுக்க சொன்னார் எனவும் இதனால் ஜனனி பயந்துகொண்டு அவரது அக்கா வீட்டிற்கு சென்று விட்டார் எனவும் எதிரி தேவியின் பெயரில் இருந்த வீட்டுடன் கூடிய 10 குழி மனையையும் தெட்சிணாமூர்த்தி பெயரிலிருந்த மனையையும் தன் பெயரில் மாற்றி எழுதிக் கொண்டார் எனவும் அதனால் மேற்படி வீட்டை எதிரி தேவியிடம் காலி செய்ய சொன்னதாகவும் இது சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு 22.09.2024 ம் தேதி தேவி போலீசில் ஒரு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:18 +0530

புகார் கொடுத்திருந்தார் எனவும் தேவி வீட்டின் EB Connection மற்றும் தண்ணீர் வசதியை எதிரி துண்டித்து விட்டார் எனவும் 10.11.2024 ம் தேதி மாலை நான் என் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது இரவு 7.00 மணியளவில் எதிரி தேவி வீட்டின் மாட்டை கட்டியதாகவும் அப்போது தேவி நீ ஏன் என் மாட்டை ஓட்டி போன என கேட்டார் எனவும் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது எனவும் நான் வழக்கம் போல் எதிரியும் தேவியும் சண்டை போடுகிறார்கள் என நினைத்துக் கொண்டேன் எனவும் அப்ப எதிரி தேவி வீட்டிற்குள் உளியை எடுத்துக்கொண்டு வேகமாக சென்றார் எனவும் சிறிது நேரத்தில் எதிரி தேவியை உளியால் குத்தி கொலை செய்துவிட்டதாக தெட்சிணாமூர்த்தி சத்தம் போட்டார் எனவும் தெருக்காரர்கள் தேவி வீட்டிற்குள் சென்று பார்த்தபோது தேவி கழுத்து, மார்பு, கை முட்டி, வயிறு ஆகிய இடங்களில் குத்தப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் எனவும் நாங்கள் தேவியின் மகள் ஜனனிக்கு தகவல் கொடுத்தோம் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரி எங்கள் தெருவை சேர்ந்தவர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:23 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:30 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.103/2025**

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணி | Father's Name | : | கணபதி |
| Village | : | கீரனூர் | Taluk | : | நன்னிலம் |
| Calling | : | | Age | : | 68 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 08th day of December 2025.**

**(Accused present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கீரனூரில் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். தேவியும் எதிரியும் சண்டை போட்டுக் கொள்வார்கள். தேவி எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. அதற்கு பின் எதிரி தேவியை கொலை செய்துவிட்டு ஓடிவிட்டதாக கேள்விபட்டேன். போலீசார் விசாரித்தார்கள்.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2025.12.08 14:27:36 +0530

சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் எதிரியிடம் இறந்துபோன தேவி ரூ.1,00,000/- கடனாக வாங்கியிருந்தார் எனவும் மேலும் அவரது கணவரின் மருத்துவ செலவிற்காக ரூ.1,50,000/- கடன் பெற்றிருந்தார் எனவும் அவரது கஷ்டத்தை பயன்படுத்திக் கொண்டு தேவியின் மகள் ஜனனியை எதிரி திருமணம் செய்து கொடுக்க சொன்னார் எனவும் இதனால் ஜனனி பயந்துகொண்டு அவரது அக்கா வீட்டிற்கு சென்று விட்டார் எனவும் எதிரி தேவியின் பெயரில் இருந்த வீட்டுடன் கூடிய 10 குழி மனையையும் தெட்சிணாமூர்த்தி பெயரிலிருந்த மனையையும் தன் பெயரில் மாற்றி எழுதிக் கொண்டார் எனவும் அதனால் மேற்படி வீட்டை எதிரி தேவியிடம் காலி செய்ய சொன்னதாகவும் இது சம்மந்தமாக அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு 22.09.2024 ம் தேதி தேவி போலீசில் ஒரு புகார் கொடுத்திருந்தார் எனவும் தேவி வீட்டின் EB Connection மற்றும் தண்ணீர் வசதியை எதிரி துண்டித்து விட்டார் எனவும் 10.11.2024 ம் தேதி இரவு 9.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது பக்கத்து வீட்டில் அலறல் சத்தம் கேட்டது தெட்சிணாமூர்த்தி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:42 +0530

அடப் பாவி இந்த மாதிரி பண்ணிட்டியேடா என சத்தம் போட்டார் எனவும் நான் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தபோது எதிரி தேவியின் வீட்டிலிருந்து கையில் உளியுடன் வெளியில் போனார் எனவும் நான் தேவி வீட்டிற்குள் சென்று பார்த்தபோது தேவி கழுத்து, மார்பு, கை முட்டி, வயிறு ஆகிய இடங்களில் குத்தப்பட்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் எனவும் நாங்கள் தேவியின் மகள் ஜனனிக்கு தகவல் கொடுத்தோம் எனவும் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. எதிரி எங்கள் தெருவை சேர்ந்தவர் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரியை காப்பாற்றுவதற்காக தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.08 14:27:49 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.